Dt.: Crl. Misc. Petition

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C. C.No. 242/2021**

DEPOSITION OF WITNESS : P.W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயசீலா | Father's Name/ Husband Name | : ஜெயக்குமார் |
| Village | : காமன்கல்லூர் | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2023

(எதிரிகள் 1 முதல் 7 ஆஜர் இல்லை கு .வி.மு.ச பிரிவு 317ன் படி மனு அனுமதிக்கப்பட்டது)

முதல் விசாரணை

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . நான் கூலிவேலை செய்து வருகிறேன். எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும் . 1ம் எதிரி என் அண்ணன் . 2ம் எதிரி என் சித்தப்பா .3ம் எதிரி என் சித்தி ,.4 ம் எதிரி என் அத்தை .5ம் எதிரி என் அண்ணன். 6 மற்றும் 7 எதிரிகள் என் சித்தப்பா மகன்கள் ஆவார்கள் . என் அண்ணன் என்னிடம் வாங்கிய பணத்தை நான் கேட்டதற்கு என் அண்ணன் தற்போது பணம் இல்லை என்றும் அதுவரை என் அம்மா , அப்பா குடியிருந்த வீட்டில் என்னை இருக்குமாறு என்னை கேட்டுக்கொண்டார் . இதனால் நானும் எனது 2 பிள்ளைகளும் அந்த வீட்டில் தங்கி வசித்து வந்தோம் . நானும் என்னுடைய மகள்கள் வானதி மற்றும் கிருபாஸ்ரீ ஆகியோர்கள் இருந்தோம் . அப்போது இந்த வழக்கின் எதிரிகள் வீட்டிற்கு வந்தார்கள். என்னிடம் தகராறு செய்து வீட்டில் இருக்கக்கூடாது வெளியே போ என்று சொல்லி அடித்து எத்தினார்கள் . அதன் பின் நாங்கள் என் பெரியமாமியார் வீட்டிற்கு சென்று விட்டோம். என் மகள் வானதி அப்போது கர்ப்பமாக இருந்ததால் 07.04.2021ம்

தேதி மாலை 03.00 மணியளவில் நானும் என் மருமகனும் என் மகளுக்கு தேவையான நோட் மற்றும் மாத்திரைகளை எடுக்க அங்கு வந்தோம் . அப்போது எதிரிகள் அனைவரும் கம்பு மற்றும் கல்லால் எங்களை அடித்தனர் . என் சித்தப்பா சிங்கம் என் மருமகனை அருவாளால் வெட்டி விட்டார் . எனக்கு இடது பக்க நெற்றி வலது முழங்கை, ஆகிய இடங்களில் காயமும் , எதிரிகள் அடித்ததில் உடலில் ஊமைக்காயமும் ஏற்பட்டது. என் மருமகனுக்கு இடதுபக்க தலை மற்றும் இடதுபக்க கழுத்துக்குக்கீழ் காயம் ஏற்பட்டது. அப்போது அங்கு வந்த என் கணவருக்கு எதிரிகள் கல்லால் அடித்ததில் இடதுபக்க நெற்றியில் காயம் ஏற்பட்டது . அருகில் இருந்த சுபாஸ் மற்றும் பரமன் ஆகியோர்கள் விலக்கி விட்டார்கள் . பின் நாங்கள் க .விலக்கு மருத்துவமனைக்கு சிகிச்சைக்குச் சென்றுவிட்டோம் . நாங்கள் சிகிச்சையில் இருந்தபோது மயிலாடும்பாறை போலீசார் என்னை விசாரித்தனர். புகார் அசாஆ 1.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2023.02.06 17:04:07 +0530